ELANGO INDUSTRIES GROUP

**Elango Industries Limited**
CIN No.L27104TN1989PLC017042
5, Ranganathan Garden, 15th Main Road Extension
Anna Nagar, Chennai-600 040.
Tel : +91 44 4217 2116
www.elangoindusties.com

January 27, 2022

The BSE Limited
Phiroze Jeejeebhoy Towers
Dalal Street, Mumbai 400 001

Scrip Code: 513452

Dear Sir,

Subject: Newspaper publication of financial results

Please find enclosed a copy of the newspaper publication of unaudited financial results of our company for the quarter and nine-month ended December 31, 2021 as approved by the Board of Directors in their meeting held on January 25, 2022 both in English and Tamil newspaper on January 27, 2022.

This is for your information and records.

Yours faithfully

For Elango Industries Limited

ELANGO INDUSTRIES LIMITED Chennai 600 040

Roshini Selvakumar

Company Secretary

# Glaucoma eye disorder is expected to double in India by 2040

Chennai, Jan 27:
Glaucoma refers to a group of eye disorders. Most commonly occurs when the pressure inside the eyes (intraocular pressure or IOP) increases enough to damage the optic nerves though it may occur in some cases when the pressure is normal. As the optic nerves that are responsible for sending images to the brain are affected, it results in vision loss. If left untreated, glaucoma can result in permanent blindness.


Dr. Soosan Jacob

Talking about the signs and symptoms of glaucoma, Dr. Soosan Jacob, Associate Chief - Clinical Services, Dr. Agarwals Eye Hospital, Chennai said that they vary depending on the type and stage of the condition. The first signs of glaucoma may be seeing halos or rainbow-colored circles around lights or having unusual sensitivity to light. Loss of peripheral or side vision is another common symptom. However, most people with glaucoma have no early warning signs. The effect is so gradual that people may not notice any change in vision until the condition progresses to an advanced stage. Hence, the only way to find out if glaucoma is to get a comprehensive dilated eye exam.

According to Dr. Soosan Jacob, Dr. Agarwals Eye Hospitals, the risk factors include the increasing prevalence of chronic conditions like: Diabetes, Cardiovascular diseases, High blood pressure, Myopia, Family history

Those who are diabetic undergo treatments, for certain eye diseases, and those who use oral contraceptive pills for long periods are highly susceptible to glaucoma. But glaucoma can affect people of all age groups and even those who do not have any chronic conditions or family history. It is diagnosed even in children.

Dr. Soosan Jacob said, Increasing awareness of the risk factors and symptoms of glaucoma should be an important strategy to address the growing glaucoma challenge. People should do regular periodic eye checkups at least once a year. Whether there are any symptoms or not, people with diabetes and other diseases are advised to undergo eye checkups compulsorily once every 6 months.

# 12 beneficiaries get houses under PMAY scheme in Muthiyalpettai

Kancheepuram, Jan.27:
On account of the 73rd Republic Day celebration, around 12 beneficiaries were distributed orders to construct houses under the Prime Minister House for All Plan. The houses will be constructed within the Muthiyalpettai Panchayat, said R.V.Ranjith Kumar while distributing the orders in the presence of the Panchayat President Anbalagan, Vice President Bhanu Priya, and other ward members. Muthiyalpettai Councillor Prema Ranjithkumar, Advocate R.V.Udhayan, Panneer, Madhan, and Dilli participated.



Earlier, Ranjith Kumar hoisted the Indian tricolour flag at the function and distributed sweets to the participants.

The R'Day function was organised at the Thevariyam Pakkam Village Panchayat under its President T.Ajay Kumar, Varanavasi Panchayat President Prema Mohana Sundaram, Officer of the Kancheepuram District Handlooms Deivayanai, Manager-DIC Sekar, HR&CE Officer Pon Jayaraman, Vadakal Village Industrialist R.Sowringam, Appar, Sundar Ganesh, and various others participated in the function.

# Historical Research Center excavate inscription of 3000 years near Uthiramerur

Kancheepuram, Jan.27:
The Uthiramerur Historical Research Center in an excavation near the Kurumpirai hill, near Salavakkam, next to Uthiramerur has dugout fossils of emeralds which have been used to bury the dead about 3000 years ago.

The inscriptions are a type of monumental belonged to the Paleolithic culture. According to the Center, the bodies of the dead are kept in large tombs under these stone circles and their favourite objects are kept and this was the beginning of the construction of tombs.



Further, the inscriptions reveal that human traces are often found in mountainous areas and slopes.

The centre has dug out more than 10 inscriptions in a row on this cliff, each 5 meters long and 5 meters wide.

More than five boulders found adjacent to Edamichi Village, near Chinnamalai reveal that a large number of people have been living in the village during the stone age. Historians estimate that those inscriptions may have been dated back to 2500 to 3000 years which clearly defines the people who have been living in this town for about 3000 years ago.

# Crescent School of Business collaborates with Harvard Business School Online

Chennai, Jan 27:
Crescent School of Business, the B - School at BSA Crescent Institute of Science and Technology (BSACIST) opens the gates to new opportunities for students, alumni & faculty members as it collaborates with the world-renowned educational institution.

Starting this year, HBS Online courses like Business analytics, Economics for managers, Financial accounting and Entrepreneurship will be offered to the students of MBA programmes at Crescent School of Business.

Harvard Business School Online offers a unique and highly engaging way to learn vital business concepts. The online certificate and credential programs are offered via HBS Online's innovative platform and are designed to bring the Harvard Business School classroom experience to life. The HBS Online courses put participants at the centre of the learning experience. The learning model is built around three key characteristics: active, case-based, and social learning.

Dr.A.Peer Mohamed, Vice-Chancellor of the institute said Crescent is moving forward digitally by developing hybrid models of teaching and learning as online is the new normal. He noted that recently Crescent has also launched the online MBA and MCA programmes and this collaboration with HBS Online will be very helpful in the online education initiative at Crescent.

# AIADMK to commence talks with allies soon

Chennai, Jan 27:
The Opposition AIADMK will be holding alliance talks and complete the district secretaries meeting in the next couple of days and by next week the party will start announcing the candidates for all vacant local bodies.

The State Election Commission had reduced the timing for the political parties to get ready and also imposed ban on political rallies and mass campaign owing to coronavirus induced lockdown rules. Our party leaders O Panneerselvam and Edappadi K Palaniswami will work out the poll strategies accordingly, an AIADMK senior said.

Party coordinator OPS had already completed three rounds of meeting with the aspirants in his native Theni district. Similarly, Leader of the Opposition EPS had also completed his meeting with party workers in Salem district.

In Chennai, Villupuram, Madurai and Coimbatore, the district secretaries have completed the first round of poll strategy meeting, the AIADMK sources said.

BJP, an ally of the AIADMK had also completed its meeting with district office-bearers in the meantime.

## Maruti Suzuki posts net profit at Rs.1,941 cr

Chennai, Jan 27:
The country's largest car maker Maruti Suzuki India Limited on January 25 reported a standalone net profit of Rs 1,011 crore for the third quarter ended last December, down 48 percent from Rs 1,941 crore, it reported a year ago. The company's net profit stood at Rs 475 crore in the previous quarter.

Standalone revenues for the Gurgaon-based carmaker stood at Rs 23,246 crore, down 1 percent, compared to Rs 23,458 crore reported in a year back. The preceding quarter saw the topline at Rs 20,538 crore.

The company recorded a sales volume of 430,668 units during the quarter under review. This was 13 percent lower than 495,897 units it sold in the same period last year.

## Turtle Wax India introduces all-new car care studio

Chennai, Jan 27:
Turtle Wax, Inc., an award-winning Chicago-based car care company, announced the launch of its co-branded car-care studio in Chennai in partnership with Car Sense; located at Plot No. 29 & 30, Sapthagiri Nagar, MRTS Inner Ring Road, Chennai 600091. Equipped with ultra-modern Turtle Wax® detailing technologies and a team of highly qualified and trained service personnel, this Turtle Wax Car Care Studio® offers a wide range of car detailing services and products specifically designed to cater to the personalized taste of car enthusiasts.

Customers at the car care studio will experience the professional results delivered by the world's favourite detailing products of Turtle Wax® like Hybrid Solutions, and Hybrid Solutions Pro with patent-pending graphene technology.

Sajan Murali Puravangara, Managing Director of Turtle Wax Car Care India Pvt. Ltd. said, "Chennai and its neighbouring cities are amongst some of the fastest-growing markets for car care here in India. We aim to provide the best-in-class premium quality car detailing service across the Southern part of the country through this all-new studio. The brand is proud to have the largest range of categories and products to experience the unique DIFM services available. too."



## 'Shiva' on Nick

Chennai, Jan 27:
The story of Shiva is about holding the right morals and fighting the villains! A not so smart policeman, a classical singer who can bring a tornado with his singing, reliable and outspoken friends, kids have fallen for this show since its beginning.

Join this 9-year-old cyclist save his city from evil on Nick, Mon to Fri at 5:30 PM.


**PUBLIC NOTICE**

This is to inform / declare to the general public that our Client Mrs.B.Srisaila W/o Mr.C.Susheel Kumar Reddy, Hindu aged 29 years, the Director of M/s. MICAFAB EXPORT PRIVATE LIMITED having its registered office at No.17, 1st Main Road, Kasturiba Nagar, Adyar, Chennai-600020, herein after called as Mrs.Cherukooru Srisaila from 27.10.2021, when the Gazette Publication was made in the Tamil Nadu official Gazette.

J. NANDAGOPAL, Advocate
F1, Vasanth Apts, No.154, V.M. Street,
Royapettah, Chennai 600 014
Cell : 94440 05955

**PUBLIC NOTICE**

My client Mr.G.Aakash@ Aakash Kannan Kanthapalam son of Ganesan, residing at No. 9/66, North Railway Station Road, Sivalingapuram, Korattur, Chennai-600076 has lost original registered deed dated 25-8-1994 vide document No.1082/1994 registered at SRO, Perambakkam, in favour of his father Ganesan, while taking photo copies near Korattur Bus stand on 22-1-2022 at 11-45 a.m. The property in the said sale deed comprised in Survey No.60/9C, situated at Thandalam village, Tiruvallur Taluk and Tiruvallur district. If anyone found the same, the same may be intimated and hand over to me and further if anyone has any objection regarding the above said document, raised your objection before me in writing within 15 days from today.

S.NIZAR AHAMED, Advocate
No.65, Avadi Road, Karayanchavadi, Poonamallee,
Chennai-600 056. Cell: 9444226463

**PUBLIC NOTICE**

Under instructions from my client namely, Mr.N.Karthikeyan Son of S.Natarajan residing at No.140, TV Nagar, Thiruvallur Street, Thirumangalam, Anna Nagar West, Chennai-600040, indent/ Proposed to Purchase Property of Land and Building bearing Otravadai Main Street, Kadai Theru, Puzhal, Chennai - 600 066, Land Measuring 1522.5 Sq.ft, Comprised in Survey No.306/42, together with building, Situated at Puzhal Village, Madhavaram Taluk, Chennai District, from Mrs.Santha, who Purchased the same from Mr.Ekambaram & others (heirs of Mr.Panchacharam) by Sale Deed dated 22.02.1996, registered Document No.727/1996, SRO, Redhills. Subject Property initially belongs to Mr.Panchacharam, her death and Legal heirs Certificate has been misplaced by Present Owner and the same is not traceable. My client intent to Purchase said Property from Present Owner Mrs.Santha and sanctioned Housing Loan against said Property from Repco Home Finance Ltd., Any person or person/ s having any right, interest, claim, or claims against or in respect of the said property by way of inheritance, mortgage, are heret t, trust, gift, possession, charge, maintenance or otherwise howsoever, are hereby requested to make the same known in writing, showing their interest along with documentary proof to the undersigned within Ten (10) days from the I date of publication of this notice, failing which, the claims of such persons will be deemed to have been abandoned, waived or surrendered.

L.MAGESH, Advocate,
27/61, SMS Flats,Jubilee Road, West Mambalam,
Chennai 600 033. Cell: 98944 80030

**PUBLIC NOTICE**

P.A. Venkatachalam, s/o Ammasai Gounder, living at Plot 21, Karpagmbal nagar, 1st street, Kottivakkam, chennai, 600041, took my above own house original sale deed dated 06/11/1975 via registered document no.2716/1975 in a two wheeler to a xerox shop for taking photo copies on reaching the shop, notice that I have lost the original document and could not find after reaching every where.

Hence, if anybody has found or has taken the above said original sale deed with document no.2716/1975, requesting to send it to the below address immediately.

The above said original documents if used illegally it will not bind me in any way is being informed through this.

P.A. Venkatachalam,
21, Karpagmbal nagar, 1st street, Kottivakkam, chennai, 600041

**PUBLIC NOTICE**

Take notice that my client **Mr. C. SUNIL KUMAR,** son of Mr. Unnikrishnan, aged about 60 years, residing at No. 1/778, P.No. 2, Krishnaveni Nagar, Mugali vakkam. Chennal- 600125, had lost document Original Sale Deed (Parent Document) on 19.01.2022 at 11.00 a.m. near Mugalivakkam Arasamaram. The Document Registration No. 910/1990 issued at kundrathur Sub-Registrar Office, Chengalpattu District, Saidapet Taluk, Porur Village, comprising under Survey No. 274, MMDA approved vide PPD/LO No. 161/88. Udaya Nagar, Plot Nos. 51 and 52 measuring 1232 Sq.ft if any person get knowledge about the possession of above said document. Kindly intimate to me, if anybody or any person misuse to get benefit in respect to the above document and abovesaid property, then my client will take appropriate legal action against them.

**Y. JOHNSON ARMSTRONG**
ADVOCATE
No. 2/1366, Thulukkanathamman Koil Street,
Mugalivakkam, Chennai-600125
**Cell No.: 9840115809**

**PUBLIC NOTICE**

This is to inform public in general that Kotak Mahindra Bank Ltd has organized an auction in below mention respect of vehicles.

1) AL 2518IL CAB CHASSIS GOODS
TN 19 AL 1959 - YOM - 2019
Minimum Reserve Price – Rs.15,39,648/-


2) AL 2518IL CAB CHASSIS GOODS
TN 19 AL 1942 - YOM - 2019
Minimum Reserve Price – Rs.15,39,648/-

Under hypothecation with
KOTAK MAHINDRA BANK LTD
is under sale in its
"As is where is Condition"
Interested parties can given their Quotations (online/offline) within 15 days from this paper publication i.e. on or before 10.02.2022

BRANCH ADDRESS:
KOTAK MAHINDRA BANK LIMITED
8th Floor (Zone 2) TVH Agnitio Park
Old Mahabalipuram Road, No 141,
Rajiv Gandhi Salai, Kandanchavadi
Chennai-600096
(Or)
Contact : Senthil Selvan Subaramanian
Kotak Mahindra Bank Limited
Contact no – 044-66248624/044-66248044
E mail : senthil.subramanian@kotak.com

**22nd ANNIVERSARY**

13.3.1922



28.1.2000

**Mr.K.GURUMURTI**
Trade Union Leader - Freedom Fighter

Inserted by
Radha Ramadurai
Janaki Venkatesan
Grand Children
and Great Grand Children
Cell: 98840 94648

**ELANGO INDUSTRIES LIMITED**
(CIN: L2710TN1989PLC017042)
Regd. Office: No.5, Ranganathan Garden,15th Main Road Extension, Anna Nagar, Chennai -600040
Website: elangoindustries.com E-mail: compliancebse@kaveripower.com

Standalone Unaudited Financial Results for the Quarter and nine-month ended December 31, 2021

| Particulars | Quarter Ended (Unaudited) | | | Nine Month Ended (Unaudited) | | Year Ended (Audited) |
|---|---|---|---|---|---|---|
| | 31.12.2021 | 30.09.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 |
| | (Rupees in Lakhs) | | | | | |
| Total Income from Operations | 22.59 | 13.72 | 18.68 | 61.23 | 18.75 | 36.25 |
| Net Profit/Loss before Tax (before Exceptional Items) | 11.89 | 1.83 | 16.57 | 14.70 | 10.49 | 5.48 |
| Net Profit/Loss after Tax (after Exceptional items) | 10.21 | 1.61 | 16.57 | 12.74 | 10.49 | 4.27 |
| Total Comprehensive Income for the period (Compromising Profit for the period after tax and Other Comprehensive Income after tax) | 10.21 | 1.61 | 16.57 | 12.74 | 10.49 | 4.27 |
| Equity share capital (Face Value of Rs.10/- per Share) | 382.16 | 382.16 | 382.16 | 382.16 | 382.16 | 382.16 |
| Other equity (excluding Revaluation Reserve as shown in the Audited Balance Sheet of the Previous Year) | 104.02 | 93.73 | 93.28 | 104.02 | 93.28 | 91.19 |
| Earnings Per Share (before & after extraordinary items) of Rs.10 each- Basic and Diluted EPS (not annualised) | 0.27 | 0.04 | 0.43 | 0.33 | 0.27 | 0.11 |

**Note:** The above is an extract of the detailed format of Financial Results filed with the Stock Exchange under the Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015

The full format of Financial Results are available on the Stock Exchange website namely www.bseindia.com and on the Company's website www.elangoindustries.com

The above results for the Quarter ended December 31, 2021 were reviewed and recommended by the Audit Committee and approved by the Board of Directors in their meeting held on January 25, 2022.

On behalf of the Board of Directors
For ELANGO INDUSTRIES LIMITED

Sd/-
S. ELANGOVAN
MANAGING DIRECTOR

Place: Chennai
Date: 25.01.2022

## விருது தொகை ரூ.2 லட்சமாக உயர்வு

# சுகிசிவம், மதுக்கூர் ராமலிங்கம், பாரதி பாஸ்கருக்கு தமிழ் வளர்ச்சித்துறை விருது: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜன.27–

**நாஞ்சில் சம்பத், சுகிசிவம், பாரதிபாஸ்கருக்கு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை விருது வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச்சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேறறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தி வழங்கிவருகிறது. அவ்வகையில் தமிழ்நாடு அரசின் விருதுகளுக்கான விருதாளர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அவ்வகையில், 2021–ம் ஆண்டிற்கான பேறறிஞர் அண்ணா விருது நாஞ்சில் சம்பத்துக்கும், மகாகவி பாரதியார் விருது பாரதி கிருஷ்ணகுமாருக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது புலவர் செந்தலை கவுதமனுக்கும், சொல்லின் செல்வர் விருது சூர்யா சேவியருக்கும், சிங்காரவேலர் விருது கவிஞர் மதுக்கூர் இராமலிங்கத்துக்கும், தமிழ்த்தாய் விருது மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும், அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது இரா.சஞ்சீவிராயருக்கும்,

### விருது தொகை ரூ.2 லட்சமாக உயர்வு

சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது உயிர்மை திங்களிதழுக்கும், தேவநேயப்பாவாணர் விருது கு.அரசேந்திரனுக்கும், உமறுப்புலவர் விருது நா.மம்மதுக்கும், கி.ஆ.பெ. விருது முனைவர் ம.ராசேந்திரனுக்கும், கம்பர் விருது பாரதி பாஸ்கருக்கும், ஜி.யு.போப் விருது ஏ.எஸ்.பன்னீர்செல்வனுக்கும், மறைமலையடிகள் விருது சுகி. சிவத்துக்கும், இளங்கோவடிகள் விருது நெல்லைக் கண்ணனுக்கும், அயோத்திதாசப் பண்டிதர் விருது ஞான.அலாய்சியசுக்கும் வழங்கிட ஆணையிடப் பெற்றுள்ளன.

இவ்வாண்டு முதல் விருது பெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகை ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சம் உயர்த்தியும் மற்றும் ஒரு சவரன் தங்கப்பதக்கம், விருதுக்கான தகுதியுரை ஆகியன வழங்கி பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப் பெறுவர். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



## கோவை, ஈரோடு, மதுரையில்

# விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பைக் காட்டும் 3 அலங்கார ஊர்திகள்: சென்னையில் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜன.27

**இந்திய விடுதலைப்போரில் தமிழகத்தின் பங்களிப்பை காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட 3 அலங்கார ஊர்திகளை கோவை, ஈரோடு, மதுரையில் காட்சிப்படுத்துவதற்காக சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

புதுடெல்லியில் நேற்று (26–ந் தேதி) நடைபெற்ற குடியரசு தின அலங்கார அணிவகுப்பில் மாநிலங்கள் சார்பாகவும், ஒன்றிய அரசின் துறைகள் சார்பாகவும் "இந்தியா 75" என்கின்ற தலைப்பில் நடைபெற்ற அலங்கார ஊர்தி அணிவகுப்பில் இந்த ஆண்டு விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பை பறைசாற்றுகின்ற வகையில் அலங்கார ஊர்திக்கான வடிவமைப்பு மாதிரிகள் ஒன்றிய அரசின் தேர்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு மூன்று முறை அவர்கள் எடுத்துரைத்த திருத்தங்களை மேற்கொண்டும் எந்தவித காரணமுமின்றி தமிழகத்தின் சார்பிலான அலங்கார ஊர்திகள் நிராகரிக்கப்பட்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது வருத்தத்தினை பிரதமருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

சென்னை அலங்கார அணிவகுப்பில்...

மேலும், புதுடெல்லியில் குடியரசு தின அலங்கார அணிவகுப்பில் வாய்ப்பு மறுக்கப்பட்ட தமிழ்நாடு அலங்கார ஊர்திகள் சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழாவில் இடம் பெறுவதோடு, தமிழ்நாடு முழுதும் காட்சிப்படுத்தப்படும் என்று கடந்த 18.1.2022 அன்று முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

அந்த வகையில், சென்னையில் நேற்று நடைபெற்ற குடியரசு தின விழாவில், இந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்கொண்ட தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்களிப்பினை போற்றி, பெருமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் மூன்று அலங்கார ஊர்திகள் வடிவமைக்கப்பட்டு அணி வகுப்பில் பங்கேற்று பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பினையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்நேற்று சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மூன்று அலங்கார ஊர்திகளையும் முதற்கட்டமாக, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் காட்சிப்படுத்தப்படுத்தும் பொருட்டு, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த அமைச்சர்கள், மாவட்ட கலெக்டர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அலங்கார ஊர்திகளை வரவேற்று, பொதுமக்கள் பெருந்திரளாக பார்வையிட்டு பயன்பெறுகின்ற வகையில் நகரின் முக்கியப் பகுதிகளில் இவ்வூர்திகள் காட்சிப்படுத்தப்படும்.

### மதுரைக்கு வரும் அலங்கார ஊர்தி

இந்த ஊர்தியின் முகப்பில் தமிழகத்தில் வேலூர் கோட்டையில் 1806–ம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சி, ஆங்கிலேயர்களை எதிர்த்து வீரமுடன் போர் புரிந்த மருது சகோதரர்கள், சிவகங்கையை மீட்ட வீரமங்கை வேலு நாச்சியார், வீரமங்கை வேலுநாச்சியாரின் போர்ப்படையில் பெண்கள் படைக்கு தலைமையேற்று, வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கினைத் அழித்து தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலி.

பரங்கியரின் ஆதிக்கத்திற்குச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்ததோடு, ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து முதன்முதலில் தீரமாய்ப் போரிட்டுத் தூக்கு கயிற்றினை வீரமுடன் ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன். அவரது படையில் தளபதியாக விளங்கிய தூத்துக்குடி மாவட்ட கவர்னகிரி வீரன் சுந்தரலிங்கம், அன்னியப் படைகளை தனியாகச் சென்று அழித்த நெற்கட்டும் செவல் பிறப்பிடமாகக் கொண்ட ஒண்டிவீரன்,

இந்திய விடுதலை வரலாற்றில் 'வெள்ளையனே வெளியேறு' என்று முதன் முதலாக வீர முழக்கமிட்ட நெற்கட்டும் செவல் மாவீரன் பூலித்தேவன், பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதைத் தடுத்த கட்டாலங்குளம் மன்னர் மாவீரன் அழகு முத்துக்கோன், வெள்ளையர்களை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டு, தூக்கிலிடப்பட்ட, மாவீரர்கள் மருது சகோதரர்கள் உருவாக்கிய காளையார் கோயில் கோபுரம் உள்ளிட்ட பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் உயிருடன் காட்சி தரும் வகையில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தியானது மதுரை மாநகர் வண்டியூர் தெப்பக்குளம் அருகில் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்படும்.

### கோவையில்

### 2–வது அலங்கார ஊர்தி

இந்த ஊர்தியில், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தனது புரட்சிகரக் கவிதைகளால் விடுதலை வேள்விக்கு வித்திட்டவரும் சுதந்திரத்திற்காக மட்டுமின்றி சமத்துவம், சமூக விழிப்புணர்வு மற்றும் பெண் விடுதலைக்காக போராடிய பெரும்புலவன் மகாகவி பாரதியார், ஆங்கிலேயரின் கப்பல் வணிகத்திற்குப் போட்டியாக முதல் உள்நாட்டு இந்திய கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவரும், எஸ்.எஸ். காலியோ எனும் பிரெஞ்சுக் கப்பலை வாங்கியதால், தேசத் துரோகியாகக் குற்றம்சாட்டப்பட்டு, இரட்டை தீவாந்திர தண்டனை பெற்றவரும், "செக்கிழுத்தச் செம்மல்" வ.உ. சிதம்பரனார்,

விடுதலைக்காகப் போராடியவரும், "ஞானபானு" மற்றும் "பிரபஞ்ச மித்திரன்" என்ற பத்திரிகைகளைத் தொடங்கி, தேசத் தலைவர்களின் அரிய தொண்டினை வெளியிட்டு தமிழகத்தில் விடுதலைத் தாகத்திற்கு வித்திட்ட தியாகி சுப்பிரமணிய சிவா, சுதந்திரப் போராட்டத்திற்காக போராடியவரும், சமூக சீர்திருத்தவாதியுமான சேலம் விஜயராகவாச்சாரி உள்ளிட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களை போற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த அலங்கார ஊர்தி கோவை மாநகர் வ.உ.சிதம்பரனார் பூங்கா அருகில் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்படும்.

### ஈரோட்டில்

### 3–வது அலங்கார ஊர்தி

இந்த ஊர்தியில், சத்தியாக்கிரக அறப்போராட்டம் நடத்தியவரும், சமூக சீர்திருத்தத்திற்காகவும், பெண் விடுதலைக்காகவும் தீண்டாமையை வேரறுக்க அரும்பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று ஒத்துழையாமை இயக்கம், சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட மூதறிஞர் இராஜாஜி, 'தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள்' என முழங்கிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்,

ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற்றிட எந்நாளும் உழைத்திட்ட கர்மவீரர் காமராஜர், சமூக சீர்திருத்தச் செயல்பாட்டாளர் ரெட்டைமலை சீனிவாசன், கலெக்டர் ஆஷ் துரையை கொன்று தன்னுயிரை மாய்த்துக் கொண்ட வீரன் வாஞ்சிநாதன், அன்னியர்களை வீரமுடன் எதிர்த்து போரிட்ட தீரன் சின்னமலை, கொடிகாத்த திருப்பூர் குமரன், விடுதலைக்காக முதன்மை பங்காற்றியவரும் சிறந்த இலக்கியவாதியுமான திருச்சி வ.வே.சு. ஐயர், அனைவராலும் போற்றப்பட்ட கண்ணியமிகு காயிதேமில்லத்,

அண்ணல் காந்தியடிகளின் பொருளாதாரப் பேராசிரியராகவும் சிறைத்தண்டனை பெற்றவருமான தஞ்சாவூர் ஜோசப் கொர்னேலியஸ் செல்லதுரை குமரப்பா, தியாகச் சீலர் கக்கன் ஆகியோரின் புகழினை வெளிப்படுத்துகின்ற வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த அலங்கார ஊர்தி ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, இ. பெரியசாமி, க. பொன்முடி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், அர. சக்கரபாணி, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, செஞ்சி மஸ்தான், மா.மதிவேந்தன்,

சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, காவல்துறை தலைமை இயக்குநர் செ. சைலேந்திரபாபு, சென்னை பெருநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தில் நேற்று 29 ஆயிரத்து 976 பேருக்கு கொரோனா

சென்னை, ஜன.27

தமிழகத்தில் நேற்று 29 ஆயிரத்து 976 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று புதிதாக 1 லட்சத்து 41 ஆயிரத்து 762 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 17,147 ஆண்கள், 12,829 பெண்கள் என மொத்தம் 29 ஆயிரத்து 976 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் வெளிமாநிலங்களில் இருந்து வந்த 18 பேரும், 12 வயதுக்குட்பட்ட 1,033 குழந்தைகளும், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 4,809 பேரும் அடங்குவர். அதிகபட்சமாக சென்னையில் 5,973 பேரும், செங்கல்பட்டில் 1,883 பேரும், கோவையில் 3,740 பேரும், ஈரோட்டில் 1,302 பேரும், கன்னியாகுமரியில் 1,035 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்தபட்சமாக பெரம்பலூரில் 90 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இதுவரை பரிசோதனை எண்ணிக்கை 6 கோடியை கடந்துள்ளது. அந்த வகையில் 6 கோடியே 24 ஆயிரத்து 712 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டு, இதுவரை 32 லட்சத்து 24 ஆயிரத்து 236 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்றைய நிலவரப்படி 9 ஆயிரத்து 906 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 4 ஆயிரத்து 732 பேர் ஆக்சிஜன் வசதி கொண்ட படுக்கைகளிலும், 1,132 பேர் தீவிர சிகிச்சை பிரிவிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாவுக்கு தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரியில் 21 பேர், தனியார் ஆஸ்பத்திரியில் 26 பேர் என 47 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர். 24 மாவட்டங்களில் உயிரிழப்பு இல்லை.

தமிழகத்தில் இதுவரை மொத்தம் 37 ஆயிரத்து 359 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்து உள்ளனர். இத்தொற்று பாதிப்பில் இருந்து நேற்று 27 ஆயிரத்து 507 பேர் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டுள்ளனர். இதுவரையில் 29 லட்சத்து 73 ஆயிரத்து 185 பேர் குணம் அடைந்து உள்ளனர். சிகிச்சையில் 2 லட்சத்து 13 ஆயிரத்து 692 பேர் உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### புதுவையில் இன்று 940 பேருக்கு கொரோனா

புதுவையில் இன்று 940 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதுவையில் இன்று தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தவர்களில் 635 பேர் புதுவையிலும் 234 பேர் காரைக்காலிலும் 57 ஏனாமிலும் 14 பேர் மாகேயிலும் அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஏனாமில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் மூதாட்டி ஒருவர் இறந்து விட்டார். இன்று 1486 பேர் சிகிச்சை பெற்றுக் குணமடைந்து வீடு திரும்பினர்.

# புறா வளர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்த பக்கத்து வீட்டு வாலிபர் கொலை: மெக்கானிக் உள்பட 2 பேர் கைது

சென்னை, ஜன. 27–

புறா வளர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்த பக்கத்து வீட்டு வாலிபரை குத்திக் கொலை செய்த மெக்கானிக் உள்பட 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

இது பற்றி போலீசார் தரப்பில் கூறப்படுவதாவது:–

சென்னை, அபிராமபுரம், ஆர்.ஏ. புரம், குட்டி கிராமணி தோட்டத்தைச் சேர்ந்தவர் சதீஷ் (வயது 38). சென்ட்ரிங் வேலை செய்து வந்தார். குற்றவழக்குகளில் தொடர்புடைய சதீஷ் மீது அபிராமபுரம், போரூர் எஸ்ஆர்எம்சி காவல் நிலையங்களில் அடிதடி வழக்குகள் உள்ளன.

இவரது வீட்டின் பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் ரஞ்சித் (வயது 19). ஹோண்டா ஷோரூமில் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறார். ரஞ்சித் தனது வீட்டில் சுமார் 100க்கும் மேற்பட்ட பந்தயப் புறாக்களை வளர்த்து வருகிறார். அவற்றுக்கு தினமும் காலை மாலை தீனி போட்டு, அவற்றை திறந்து விட்டு அவை பறப்பதை தனது செல்போனில் வீடியோ எடுப்பார். பின்னர் அந்த வீடியோவை சமூக வலைதளங்களில் போட்டுப்பார்த்து ரசிப்பார். ரஞ்சித் புறா பறக்க விடும் போது அங்கு அவரது நண்பர்கள் ஏராளமான பேர் வந்து கூச்சல் இட்டு வந்துள்ளனர்.

ரஞ்சித்தும், சதீஷும் பக்கத்து வீட்டில் வசித்து வந்ததால் நண்பர்களாக பழகி வந்தனர். இந்நிலையில் ரஞ்சித் புறா வளர்ப்பது தொடர்பாக சதீஷ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அடிக்கடி நண்பர்கள் ரஞ்சித் வீட்டுக்கு கும்பலாக வந்து செல்வது சதீஷுக்கு பிடிக்காததால் அது தொடர்பாக ரஞ்சித்தை கண்டித்துள்ளார். இது தொடர்பாக இருவருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் ரஞ்சித்தின் உறவினர் குழந்தைக்கு நேற்று மாலை ரஞ்சித்தின் வீட்டு மொட்டை மாடியில் பிறந்த நாள் விழா கொண்டாடியுள்ளனர். அப்போது மது விருந்து நடந்துள்ளது. விழாவுக்கு ரஞ்சித்தின் உறவினர்கள் ஏராளமான பேர் வந்துள்ளனர். இந்நிலையில் புறா வளர்ப்பது தொடர்பாக விழாவின் போது ரஞ்சித்துக்கும், சதீஷுக்கும் நேற்று இரவு 10 மணியளயவில் மீண்டும் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த ரஞ்சித் வீட்டில் இருந்த கத்தியை எடுத்து வந்து சதீஷின் நெஞ்சில் குத்தினார். இதில் ரத்த வெள்ளத்தில் சதீஷ் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார்.

இது குறித்து 108 ஆம்புலன்சுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனடியாக 108 ஆம்புலன்சில் விரைந்து வந்த டாக்டர்கள் சதீஷை பரிசோதனை செய்து விட்டு அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

தகவல் கிடைத்ததும் அபிராமபுரம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து சதீஷின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சென்னை ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக ரஞ்சித் உள்பட 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

# விக்கிரவாண்டி அருகே 5 பயணவழி ஓட்டல்களில் அரசு பஸ்கள் நிற்க தடை

சென்னை, ஜன.27

**தரமற்ற உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் மேலும் 5 பயணவழி ஓட்டல்களில் அரசு பஸ்கள் நிற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்துக்கு சொந்தமான சேலம் ஸ்டார் அசோசியேட்ஸ் என்ற ஒப்பந்ததாரர் நடத்தும் மாமண்டூர் பயண வழி உணவகம் மற்றும் கடைகளில் (மோட்டல்) உணவின் தரம் குறைவாகவும், அதிக விலைக்கு உணவுகள் விற்பனை செய்யப்படுவதாகவும் போக்குவரத்து துறைக்கு புகார்கள் எழுந்தன.

இதையடுத்து போக்குவரத்து துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் உத்தரவின்பேரில் சம்பந்தப்பட்ட உணவகம்–கடைகளில் அதிகாரிகள் குழு ஆய்வு மேற்கொண்டனர். இதில் உணவுகள் தரமில்லாமல் இருப்பதும், கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து மாமண்டூர் சாலை வழி உணவகத்தில் அரசு போக்குவரத்து கழக பஸ்கள் நின்று செல்ல தடை விதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக விக்கிரவாண்டி அருகே தரமில்லாத உணவு மற்றும் கூடுதல் விலைக்கு உணவுகள் விற்ற மேலும் 5 உணவகங்களில் பஸ்கள் நிற்க தடை விதித்து, போக்குவரத்து துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுகுறித்து மாநகர போக்குவரத்து கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:


அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் இளங்கோவன் தலைமையில் அதிகாரிகள் குழு, போக்குவரத்து கழக பஸ்கள் நிற்கும் நெடுஞ்சாலை தனியார் உணவகங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதில் விக்கிரவாண்டி அருகே செயல்பட்டு வரும் அண்ணா, உதயா, வேல்ஸ், ஹில்டா மற்றும் அரிஸ்டோ ஆகிய 5 உணவகங்கள் சுகாதாரமற்ற உணவு பொருட்களை அதிக விலைக்கு விற்றது ஆய்வின்போது கண்டறியப்பட்டது. மேற்கண்ட உணவகங்களில் அரசு பஸ்கள் நிறுத்த தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உணவகங்களில் அரசு போக்குவரத்து கழக பஸ்கள் நிறுத்துவதற்காக போடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


**22nd ANNIVERSARY**

13.3.1922



28.1.2000

**Mr.K.GURUMURTI**

Trade Union Leader - Freedom Fighter

Inserted by

**Radha Ramadurai**
**Janaki Venkatesan**
**Grand Children**
**and Great Grand Children**

**Cell: 98840 94648**


**படிவம் மூடுதல் 6 (விதி 7ஐ பார்க்க)**

தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் சென்னை அமர்வு முன்பாக

மெசர்ஸ் வெங்கு ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட் விஷயத்தில்

(நிறுவனங்கள் சட்டம், 1956ன் கீழ் நிறுவனம் துவக்கப்பட்டது)

**COMPANY PETITION No. 831 of 2019**

**திரு. J.E. அருள்ராஜ், த/பெ. ஜேசுடமை, பங்குதாரர் மற்றும் பங்களிப்பாளர்**
**மெசர்ஸ் வெங்கு ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட்** ...மனுதாரர்

**மனு பற்றிய அறிவிப்பு**

மேலே பெயரிடப்பட்டுள்ள நிறுவனத்தை சென்னை தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் மூடுவதற்கான மனு ஒன்று 28.06.2019 அன்று மேற்படி தீர்ப்பாயத்தில் பங்குதாரரும் மற்றும் பங்களிப்பாளருமான மேற்படி **திரு. J.E. அருள்ராஜ், த/பெ. ஜேசுடமை,** 5/12 செயின்ட் தாமஸ் மவுண்ட், பூந்தமல்லி சாலை, நந்தம்பாக்கம், சென்னை 600089 அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட மனு தீர்ப்பாயம் முன்பு 20.04.2022 அன்று விசாரணைக்கு வருகிறது.

ஏதேனும் பங்களிப்பாளர் அல்லது பிற நபர் யாரேனும் மேற்படி மனு மீதான உத்தரவை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பினால் அது குறித்து மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு இந்த அறிவிப்பின் நோக்கம் குறித்து அவரால் அல்லது அவரது பிரதிநிதியால் கையொப்பமிடப்பட்டு அவரது பெயர் மற்றும் முகவரியுடன் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு மனு விசாரணைத் தேதிக்கு ஐந்து நாட்களுக்கு மிகாமல் வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் நேரிலோ அல்லது அவரது பிரதிநிதி மூலமாகவோ விசாரணையில் ஆஜராக வேண்டும். மனுவின் நகல் கீழே கையொப்பமிடப்பட்டவரால் எந்தவொரு கடன் வழங்கியவருக்கும் அல்லது பங்களிப்பாளருக்கும் பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் வழங்கப்படும். மனுவை எதிர்ப்பதாக இருப்பின் அதற்கான எந்தவொரு பிரமாணப் பத்திரமும், தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும், மேலும் அதன் நகல் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும்.

27 ஜனவரி 2022 அன்று தேதியிடப்பட்டது.

ஒப்பம்/-
S. ஷிவசங்கர் B.Com., B.L.
IBBI/IPA-001/IP-P-02141/2020-2021/13294
A-102, சுவராஜ் இல்லம், ஷ்ரேயா பிளாக், பொன்னி டெல்டா, திருச்சிராப்பள்ளி 620 005
**தற்காலிக கலைப்பாளர் - மெசர்ஸ் வெங்கு ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை**
sssprovisionalliquidator@gmail.com | 94431 41900.


**14-ஆம் ஆண்டு நினைவு நாள்**



வானகரம் முதல்நிலை ஊராட்சி மன்றத்தின் 1வது வார்டு முன்னாள் உறுப்பினர் மற்றும்
முன்னாள் அ.இ.அ.தி.மு.க. ஒன்றிய பிரதிநிதி

**திருமதி. P.பவானி**

மறைவு: 27.01.2008

என் கண்களுக்கு இமையாய் இருந்தாய்!
கைகளுக்கு விரலாய் இருந்தாய்!
இதயத்திற்குள் உயிராய் இருந்தாய்!
இன்று இதயம் மட்டும் இருக்கிறது!
நீ எங்கே என் அன்பு தெய்வமே?

கணவர்: K.ராஜா(எ) பேரழகன் M.C.
அ.இ.அ.தி.மு.க. வில்லிவாக்கம் ஒன்றிய தலைவர்
மகன்: K.P.ஜெகன் & மகள்: K.P.ஸ்ரீதேவி

**9710626314**


## இளங்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

(CIN : L2710TN1989PLC017042)

பதிவு அலுவலகம் : எண்.5, ரங்கநாதன் தோட்டம், 15வது மெயின் ரோடு விரிவு, அண்ணா நகர், சென்னை 600 040.

Website: elangoindustries.com E-mail: compliancebse@kaveripower.com

**டிசம்பர் 31, 2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூபாய் லட்சங்களில்)

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | தணிக்கை செய்யாதது | | | தணிக்கை செய்யாதது | | தணிக்கை செய்தது |
| | 31.12.2021 | 30.09.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 |
| செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் | 22.59 | 13.72 | 18.68 | 61.23 | 18.75 | 36.25 |
| வரிக்கு முந்தைய நிகர லாபம்/(நஷ்டம்) (சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) | 11.89 | 1.83 | 16.57 | 14.70 | 10.49 | 5.48 |
| வரிக்கு பிந்தைய நிகர லாபம்/(நஷ்டம்) (சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | 10.21 | 1.61 | 16.57 | 12.74 | 10.49 | 4.27 |
| நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்குப் பிந்தைய காலத்திற்கான சமரச லாபம் மற்றும் வரிக்குப் பிந்தைய பிற விரிவான வருமானம்) | 10.21 | 1.61 | 16.57 | 12.74 | 10.49 | 4.27 |
| சம பங்கு மூலதனம் (முகமதிப்பு தலா பங்கு ரூ.10/-) | 382.16 | 382.16 | 382.16 | 382.16 | 382.16 | 382.16 |
| இதர சமம் (கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளபடி மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | 104.02 | 93.73 | 93.28 | 104.02 | 93.28 | 91.19 |
| பங்கு ஒன்றின் வருவாய் தலா ரூ.10/- (அசாதாரண அயிட்டங்களுக்கு முன் மற்றும் பின்) அடிப்படை மற்றும் திட்டம் குறைந்தது (கணக்கிடப்படவில்லை) | 0.27 | 0.04 | 0.43 | 0.33 | 0.27 | 0.11 |

**குறிப்பு:** மேற்குறிப்பிட்டவைகள் 2015ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும்.

மேற்குறிப்பிட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கத்தின் முழு படிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.elangoindustries.com-லும் காணலாம்.

டிசம்பர் 31, 2021 அன்றுடன் முடிந்த மேற்கண்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள், கம்பெனியின் தணிக்கையாளர்களின் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, ஜனவரி 25, 2022 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

இயக்குனர்கள் குழுவிற்காகவும் அதன் சார்பாகவும்
**இளங்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக**
ஒப்பம்/- S. **இளங்கோவன்**
நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி : 25.01.2022